

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (29.12.2025) கோயம்புத்தூரில், பரம்பிக்குளம் – ஆழியாறு திட்ட பாசன விவசாயிகள் சங்க நிருவாக திட்டக் குழுத் தலைவர் பரமசிவம், திட்டக்குழு உறுப்பினர்கள் ப.அருண், சி.நித்தியானந்தன், கே.நல்லதம்பி, கோ.குருசாமி, ப.ஈஸ்வரன், மு.தெய்வசிகாமணி, மு.ஈஸ்வரமூர்த்தி, ர.பாலசுப்பிரமணி, ஜெயப்பிரகாஷ் ஆகியோர் சந்தித்து, பரம்பிக்குளம் ஆழியாறு பாசன வாய்க்காலை தூர்வாரிட 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.ஈஸ்வரசாமி, கணபதி ப. ராஜ்குமார், சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (29.12.2025) கோயம்புத்தூரில், தொழில் அதிபரும், கல்வியாளருமான பி.கே.கிருஷ்ணராஜ் வானவராயர் அவர்கள் சந்தித்து, கோவை மாநகரின் ஆத்துப்பாலம் முதல் உக்கடம் சந்திப்பு ஒப்பணக்கார வீதி வரை உள்ள உயர்மட்ட மேம்பாலத்திற்கு 'சி. சுப்பிரமணியம் மேம்பாலம்' என்று பெயர் சூட்டியமைக்காக நன்றி தெரிவித்தார். உடன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி மற்றும் கிருஷ்ணராஜ் வானவராயர் அவர்களின் மகன் சங்கர் வானவராயர், மருமகன் ராஜ்குமார் ஆகியோர் உள்ளனர்.

### கலவரக்காரர்களையும், காவல்துறையினரையும் கட்டுப்படுத்தாமல்

# கிறிஸ்துவப் பிரார்த்தனையில் பிரதமர் மோடி பங்கேற்றதில் அர்த்தமில்லை!

## 'தி இந்து' நாளேடு தலையங்கம்!

**சென்னை, டிச.31-**

**கலவரக்காரர்களையும், பா.ஜ.க. ஆளும் மாநிலங்களின் காவல்துறையினரையும் கட்டுப்படுத்தாமல், கிறிஸ்துமஸ் பிரார்த்தனையில் பிரதமர் மோடி பங்கேற்றதில் எந்த அர்த்தமும் இல்லை என 'தி இந்து' நாளிதழ் தலையங்கம் விமர்சித்துள்ளது.**

The Lost message எனும் தலைப்பில், சிறுபான்மையினருக்கான அரசின் பாதுகாப்பு உறுதிமொழிகள் வெறும் அடையாளத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும் என வலியுறுத்தி தி இந்து ஆங்கில நாளிதழ் தலையங்கம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

தலைநகர் புதுடெல்லியில் உள்ள தேவாலயத்தில் டிசம்பர் 25 அன்று நடைபெற்ற கிறிஸ்துமஸ் பிரார்த்தனையில் பிரதமர் மோடி கலந்துகொண்டது உலக அளவில் கவனம் பெற்றதாகவும், பிரதமர் மோடி இதற்கு முன் விழாக்களின் போது கிறிஸ்தவத் தலைவர்களை சந்தித்தும் விருந்தளித்துள்ளார் என்றாலும், ஒரு தேவாலயத்தில் நடைபெற்ற பிரார்த்தனையில் பங்கேற்றது இதுவே முதல் முறை என்றும், பிரதமர் மோடி தனது சமூகவலைத்தளத்தில் இயேசு கிறிஸ்துவின் போதனைகளை மேற்கோள் காட்டி, அமைதி, கருணை மற்றும் நல்லிணக்கத்திற்கான வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டதையும் இத்தலையங்கம் சுட்டிக்காட்டி உள்ளது.

கிறிஸ்துமஸ் காலத்திலும் அதற்கு முன்பும் கிறிஸ்தவர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் குறித்த செய்திகள் வெளியான நிலையில், பன்முகத்தன்மை கொண்ட இந்திய சமூகச் சூழலில் சிறுபான்மை மக்களுக்கு நம்பிக்கையூட்டும் செயலாக பிரதமர் மோடி யின் தேவாலய வருகை அமைந்ததாகவும் மாநில ஆளுநர்கள் சிறுபான்மை மக்களின் விழாக்களில் பங்கேற்பது போன்ற நடவடிக்கைகள், அன்றாட அரசியலின் ஒரு பகுதியாகவும் பன்முகப் பண்பாட்டுக் கலவையின் உண்மையான பிரதிபலிப்பாகவும் இருந்து வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதமர் மோடியின் சித்தாந்தத் தொட்டிலாக கருதப்படும் ஆர்.எஸ்.எஸ்., கிறிஸ்தவத்தையும் இஸ்லாத்தையும் நீண்ட காலமாக இந்தியாவிற்கு அந்நியமானவையாகக் கருதி வருதாகவும், இருப்பினும், அண்மைக் காலமாக இந்த கண்ணோட்டத்தை ஆர்.எஸ்.எஸ். மாற்றி வருவதன் அடையாளமாகவே கிறிஸ்துமஸ் வழிபாட்டில் பிரதமர் மோடி பங்கேற்றதாக கருதலாம் என்றும் தெரிவித்துள்ளது தி இந்து,

ஆனால், உண்மையில் இந்தக் கருத்துடன் பிரதமர் மோடி உடன்படுவதாக இருந்தால், அதனை வலிமையாகவும் தெளிவாகவும் அவர் வெளிப்படுத்த வேண்டும், அப்போது தான் அவரது கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள மாநில அரசுகளின் காவல்துறைகள் இதனை உணர்ந்து செயல்படும் என்றும் அது வலியுறுத்தி உள்ளது.

கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் கொண்டாட்டங்களுக்கு எதிரான நாசவேலைகளும் வன்முறைகளும் அன்றாட நிகழ்வாக உள்ள தாகவும், அசாம், கேரளா, உத்தரப் பிரதேசம், சத்தீஸ்கர், டெல்லி, ஒடிசா உள்ளிட்ட மாநிலங்களில் பாதிரியார்கள் தாக்கப்படும் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள தி இந்து தலையங்கம், தனிநபர் சுதந்திரம் மற்றும் மதச் சுதந்திரம் அரசியலமைப்பால் பாதுகாக்கப்படுவதாகவும், மதமாற்றம் குறித்த போலியான குற்றச்சாட்டுகளை முன்வைத்து நடத்தப்படும் வன்முறையை நியாயப்படுத்த முடியாது என்றும் தெளிவுபடுத்தி உள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் கிறிஸ்துமஸ் தொடர்பான வணிக நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளதை அது சுட்டிக்காட்டி உள்ளது இந்தச் சம்பவங்களில் சங் பரிவாருடன் தொடர்புடைய குழுக்கள் ஈடுபட்டுள்ளதாகவும், பிரதமர் மோடியின் கிறிஸ்துமஸ் செய்திக்குப் பிறகும், இந்த வன்முறையில் ஈடுபட்ட கும்பல்களுக்கு எதிராக எந்த அர்த்தமுள்ள காவல் துறை நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் விமர்சித்துள்ளது 'தி இந்து'

இதற்கு மாறாக, பாஜக தலைவர்கள் உட்பட பலரால் கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிரான மிரட்டல்களும் வன்முறை அச்சுறுத்தல்களும் தொடர்வதாகவும் குற்றம் சாட்டி உள்ளது. சங் பரிவாரின் வன்முறைகள் பிரதமர் மோடியின் கிறிஸ்துமஸ் வாழ்த்துச் செயதியை பிரதிபலிப்பதாக இல்லை என்றும், கலவரக்காரர்களும், பா.ஜ.க. ஆளும் மாநிலங்களின் காவல்துறையினரும் பிரதமரின் செய்தியை புரிந்து கொண்ட தற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை என்றும் விமர்சித்துள்ள தி இந்து தலையங்கம், இந்தியாவில் பன்மைத்துவத்திற்கு ஆதரவாக மேலோட்டமான அடையாளச் செயல்களைத் தவிர வேறு எதையும் செய்ய பா.ஜ.க. விரும்பவில்லை என்பதே இதன் பொருள் என்றும் குற்றம் சாட்டி உள்ளது.

## அமாவாசை



இன்னும் 3 அமாவாசைகள்
தான் இருக்கின்றன -
எடப்பாடி

அமாவாசைக்கு
எப்ப பார்த்தாலும் அமாவாசை
ஞாபகம் தான் போ...



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி திருவரங்குளம் மேற்கு ஒன்றியம் குப்பகுடி ஊராட்சி பாகம் எண் 119 பகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதன் "என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரை கூட்டத்தில் கலந்துகொண்டு பாக முகவர்,பாகநிலை உறுப்பினர்கள்,பாக நிலை டிஜிட்டல் முகவர்களுடன் ஆலோசனை மேற்கொண்டு இல்லம் தோறும் சென்று பரப்புரை பணியில் ஈடுபட்டு 'திராவிட மாடல்' அரசின் சாதனைகளை எடுத்துக்கூறி பரப்புரை பணியில் ஈடுபட்டார். இந்த நிகழ்வில் திருவரங்குளம் மேற்கு ஒன்றியச் செயலாளர் கே.பி.கே.டி.தங்கமணி, கழக நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### கள்ளக்குறிச்சி – பிரிதிவிமங்கலத்தில் மின்சாரம் தாக்கி

# உயிரிழந்தவர் குடும்பத்திற்கு ரூ.3 லட்சம் நிவாரண நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, டிச. 31-**

**கள்ளக்குறிச்சி மாவட்டம், பிரிதிவிமங்கலம் கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துள்ளதுடன் நிதியுதவியையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

கள்ளக்குறிச்சி மாவட்டம் மற்றும் வட்டம், பிரிதிவிமங்கலம் கிராமத்தில் வசிக்கும் ராஜகோபால் (வயது 57) த/பெ.அய்யாக்கண்ணு என்பவர் 28.12.2025 அன்று காலை சுமார் 9.00 மணியளவில் தனக்குச் சொந்தமான கிணற்றில் உள்ள விவசாய மின் மோட்டாரினை விவசாயத்திற்காக இயக்கும்போது எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த ராஜகோபால் அவர்களின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆலடி அருணா
### டிசம்பர் 31 (2004)



**தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக மூன்று முறையும், நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவை உறுப்பினராகவும், தமிழக சட்டத்துறை அமைச்சராகவும், தி.மு.கழகத்தின் செய்தித் தொடர்புச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**இந்தித் திணிப்பை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்திலும், விலைவாசி உயர்வு மறியல் போராட்டத்திலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**"இளமைக் காலம் முதல் பகுத்தறிவு இயக்கத்தில் அவர் கொண்ட பற்றும் உறுதியும்; அரசியலில் ஏற்பட்ட மாறுபாடுகளால்கூட சேதாரமடையவில்லை" என தலைவர் கலைஞரால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூ.197.45 கோடியில் 969 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள்!

## அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன் – முனைவர் கோவி.செழியன் திறந்து வைத்தனர்!

தஞ்சாவூர், டிச.31–

தஞ்சாவூர் மாவட்டம் வல்லம் பேரூராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் அய்யனார் கோவில் பகுதி II திட்டப் பகுதியில் ரூ.197.45 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 969 புதிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டடத்தினை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் ஆகியோர் திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மேலாண்மை இயக்குநர் ஸ்ரேயா பி.சிங், மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க. செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, ச.முரசொலி எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் டி.கே.ஜி.நீலமேகம், கா.அண்ணாதுரை, மேயர் சண்.இராமநாதன், தஞ்சாவூர் மாநகராட்சி துணை மேயர் மரு. அஞ்சுகம் பூபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்ததாவது:–

முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தஞ்சாவூர் மாவட்டம் வல்லம் பேரூராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் அய்யனார் கோவில் பகுதி II திட்டப் பகுதியில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியில் ரூ.197.45 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 969 புதிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

இந்தக் குடியிருப்பில் தஞ்சாவூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நீர்நிலைகளில் குடியிருக்கும் ஏழை, எளிய மக்களுக்கு ஒதுக்கப்பட உள்ளது. குடியிருப்புகளுக்கான பயனாளிகள் பங்களிப்புத் தொகை ரூ.9 கோடியே 69 லட்சம் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாநகராட்சி வழங்க உள்ளது.

இந்தக் குடியிருப்பில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 7.44 லட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம், 1 லட்சம் கொள்ளளவு கொண்ட 4 கீழ்நிலை நீர்தேக்கத் தொட்டிகள், 6 லட்சம் லிட்டர் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், அங்கன்வாடி மையம், நியாய விலைக்கடை, பால் பூத், நூலகம், சமுதாய நலக்கூடம், துணை சுகாதார மையம், பூங்கா, வாகனம் நிறுத்தும் இடம் போன்ற பொதுமக்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் அமைத்துத் தரப்பட்டுள்ளது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் இந்தியாவிலேயே முதன் முதலாக 1970ஆம் ஆண்டு ஏழை, எளிய மக்களுக்கு வீடுகள் வழங்க கொண்டு வரப்பட்ட அற்புத திட்டங்களில் ஒன்று தான் "தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம். இந்த வாரியத்தால் இதுவரை 489 திட்டப் பகுதிகளில் 2 லட்சத்து 33 ஆயிரம் 782 அடுக்குமாடி குடியிருப்பு கள் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கடந்த 4 ஆண்டுகளில் தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூ. 46 கோடியே 27 லட்சம் மதிப்பில் 504 குடியிருப்பு களும், திருவாரூர் மாவட்டத்தில் ரூ. 10 கோடியே 53 லட்சம் மதிப்பில் 80 குடியிருப்புகளும், கட்டி முடிக்கப்பட்டு ஏழை, எளிய மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2014 – 2021 வரை 6 ஆண்டு காலத்தில் ரூ.2 ஆயிரத்து 438 கோடி மதிப்பில் 27 ஆயிரத்து 668 குடியிருப்பு கள் மட்டுமே கட்டப்பட்டது.

கடந்த 4 ஆண்டுகளில் ரூ.6 ஆயிரத்து 363 கோடியே 19 லட்சம் மதிப்பில், 55 ஆயிரத்து 831 அடுக்குமாடி குடியிருப்பு கள் கட்டி முடிக்கப்பட்டப்பட்டுள்ளது. அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்டுள்ள 83 ஆயிரத்து 499 அடுக்குமாடி குடியிருப்பு களில், கடந்த ஆட்சியில், 6 ஆயிரத்து 417 குடியிருப்பு கள் மட்டுமே வழங்கப்பட்ட நிலையில், தற்போது 4 ஆண்டுகளில் 68 ஆயிரத்து 152 அடுக்குமாடி குடியிருப்புகள் ஏழை, எளிய மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் 4 லட்சத்து 10 ஆயிரத்து 574 வீடுகள் கட்ட திட்டமிடப் பட்டு, கடந்த ஆட்சி காலத்தில் 1 இலட்சத்து 40 ஆயிரத்து 250 வீடுகள் கட்டி முடிக்கப்பட்ட நிலையில், தற்போது 2 இலட்சத்து 7 ஆயிரத்து 605 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. 55 ஆயிரத்து 99 தனி வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர் மாவட்டத்தில் 1142 வீடுகளும், திருவாரூர் மாவட்டத்தில் 245 வீடுகளும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 189 வீடுகள் என மொத்தம் 1,576 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதற்கு மானியமாக ரூ.38 கோடியே 55 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**குடிசை இல்லாத் தமிழ்நாடு**

பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டத்தின் கீழ் இதுவரை ஒன்றிய அரசு ஒரு வீட்டிற்கு ரூ. 1 லட்சத்து 50 ஆயிரமும், மாநில அரசு ரூ. 60 ஆயிரமும் என மொத்தம் ரூ.2 லட்சத்து 10 ஆயிரம் வழங்கப் பட்டது.

2025–2026 முதல், மாநில அரசின் மானியத்தை ரூ. 60 ஆயிரத்தில் இருந்து ரூ. 1 லட்சமாக உயர்த்தி, ஒரு வீட்டிற்கு ரூ. 2 லட்சத்து 50 ஆயிரமாக வழங்கப்பட உள்ளது. வீடுகளை காலி செய்யும் குடியிருப்புதார்களுக்கு வழங்கப்படும் கருணைத் தொகை ரூ.8 ஆயிரத்தில் இருந்து ரூ. 24 ஆயிரமாக உயர்த்தி வழங்கப்படுகிறது.

கலைஞர் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் இதுவரை ரூ. 3 ஆயிரத்து 500 கோடி மதிப்பில், 1 லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளது. 2030 க்குள் 8 லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு குடிசை இல்லாத் தமிழ்நாடு உருவாக்கப்படும்.

முதல்வர் அவர்கள் கல்வி, மருத்துவம், மகளிர் முன்னேற்றம், தொழில் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சி என அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக மாற்றி வருகிறார்.

அதுபோன்று, குடிசைகளே இல்லாத தமிழ்நாடு, அனைவருக்கும் வீட்டு வசதி என்ற உன்னத நோக்கத்தோடு திட்டங்களைத் தமிழ்நாடு அரசு நிறைவேற்றி வருகிறது என குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்தார்.

முன்னதாக தஞ்சாவூர் மாவட்டம் வல்லம் பேரூராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் அய்யனார் கோவில் பகுதி II திட்டப் பகுதியில் ரூ.197.45 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 969 புதிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டடத்தினை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், உயர்கல்வித் துறை அமைச்சர் – முனைவர் கோவி.செழியன் ஆகியோர் திறந்து வைத்து பார்வையிட்டு பயனாளிகளுக்கு குடியிருப்பு ஆணைகளை வழங்கினார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ கும்பகோணம் சட்டமன்றத் தொகுதி, குடந்தை கிழக்கு ஒன்றியம், வாளாபுரம் ஊராட்சியில், பாகம் எண் 31 ல் "என்வாக்குச் சாவடி வெற்றி வாக்குச்சாவடி" பிரச்சார பரப்புரையை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் கும்பகோணம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஜெ.சுதாகர், ஒன்றியக் கழக நிர்வாகிகள் செல்வராஜ், கே.நேரு, வாளாபுரம் நடராஜன் மற்றும் பகுதிச் செயலாளர் பிரவீன் ராஜ், ஓ.டி.என். டேனியல் ராஜ், ஐ.டி.விங். ஆர்.வேல்முருகன், பி.எல்.ஏ2.செந்தில்குமார், பி.டி.ஏ.முருகேசன் மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.